முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1031

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.07.2022, செவ்வாய்கிழமை

1. அறமெனும் வேலிகொண்ட அண்ணலே
   அருளாக மக்களுக்கு வெளிப்படுகின்ற வள்ளலே
   வரம்தனை என்பால் பெற்று இந்த வையகத்தை
   வல்லமை மிக்க ஞானயுகமாக மாற்றவந்த ஞானதேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி தன்னை
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 10 நாள், 26.07.2022 செவ்வாய்கிழமை)
   ஆசியதும் அரங்கனை நோக்கி ஆறுமுகன் யான்
   அனுதினமும் ஆற்றலை அனுப்பி வர
3. வரங்கள் கூடி அரங்கனும் வந்த நோக்கத்தை
   வையகத்தில் பூர்த்தி செய்ய
   ஆறுமுகன் என் பரிபூரண ஆசி உண்டு
   ஆசி தந்தேன் உலகமாற்றத்தை அரங்கனே இந்த கலியில் நடத்தக்கூடும்
4. கூடவே அதற்கு உண்டான உயர் ஞானப்படைகளை
   குரு அரங்கன் தலைமையில் உலகமெங்கும் தொண்டர்களாக்கி
   ஆக்கியே சுத்த சன்மார்க்க வழியில்
   அகிலமே இயங்க அருள்புரிவேன்
5. மிகைபட இந்த மாற்றத்தை
   மேலான தொண்டர்களைக் கொண்டே ஆறுமுகன்
   வகைவகையாக உலகமெங்கும் செய்துவர
   வணங்கி உலகோர் தொடர்ந்து அரங்கன் நாமஜெபம் சொன்னால் போதும்
6. போதுமப்பா அவர்களுக்கெல்லாம் ஞானசித்தி
   புண்ணியவடிவில் வந்து இனிதே அரங்கன் காட்சியாக
   ஆறுமுகன் யான் அருளி உலகோர்க்கு
   அற்புதத்தை இந்த கலியில் நடத்துவேன்
7. நடத்தவே ஓங்காரக் குடிலின்
   நாயகனாம் அரங்கன் திருவடி பற்றி
   தடையற உலகோர் ஞானம் பயில
   தரணியில் அனைவருக்கும் ஞான சித்தி உறுதியாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–